
பக்கங்கள் - 20

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 17 வெள்ளிக்கிழமை 03.10.2025 | அதிர்வு 63



## விஜேராம இல்லத்தை மஹிந்த இன்னமும் ஒப்படைக்கவில்லை

### காரணத்தைக் கூறுகின்றார் அவரின் பேச்சாளர் மனோஜ்

”கொழும்பு – விஜேராம உத்தியோக பூர்வ இல்லத்தில் அரசுக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் உபகரணங் 03▶



# ஈஸ்டர் தாக்குதல்: பிள்ளையானுக்கு நேரடித் தொடர்பு!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

**“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் முன்கூட்டியே அறிந்திருந்தார். இதில் அவர் நேரடியாக ஈடுபட்ட தகவல்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.”**

**- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

**தென்னிலங்கை தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளபடி உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து முறையான விசாரணை இன்னமும் நடைபெற்று வருகின்றது.

அத்துடன், விசாரணைகளில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

தாக்குதல் தொடர்பான ஆரம்ப விசாரணைகளின் குறைபாடுகள், அலட்சியம் குறித்தும் தற்போது முறையான விசாரணை நடைபெறுகின்றது.

பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தாக்குதலில் நேரடியாக ஈடுபட்ட தகவல்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.” – என்றார்.

# மனிதப் புதைகுழி அகழ்வுக்கு போதுமான நிதி வழங்கப்படும்

## எவ்வித சிக்கலும் இல்லை என்கின்றார் நீதி அமைச்சர் ஹர்ஷன

வடக்கு, கிழக்கு பகுதிகளில் மனிதப் புதைகுழிகள் எனச் சந்தேகிக்கப்படும் இடங்களில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்குப் போதுமான நிதி, தமது அமைச்சிடம் இருக்கின்றது என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

மனிதப் புதைகுழிகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்படி, மட்டக்களப்பு, குருக்கள் மடம் மனிதப் புதைகுழிக்கான நிதி முழுமையாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கூறினார்.

02▶






‘நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகளை உடனடியாக சட்டதத்தின் முன் கொண்டு வந்து நிறுத்துவோம்” என்று ஆரவாரம் பண்ணிய - அதன் மூலம் அதிகாரத்துக்கு வந்த - தேசிய மக்கள் சக்தியினர் ஒரு வருடம் கடந்தும் அவ்விடயத்தில் முன் நகர முடியாமல் தடுமாறுகின்றனர். த

‘செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் தலை மேலே’ - என்பது போல இப்போதையப்பாட்டுக்கு எல்லா விடயங்களுக்குமான பொறுப்பையும் பிள்ளையான் மீது சுமத்தி, அரசியல் சித்து விளையாட்டை ஆளுதரப்பினர் ஒருவாறு முன்கொண்டு செல்லுகின்றனர்.

அந்த விடயத்தில் பிள்ளையானுக்குத் தொடர்பு இருக்கலாம். ஆனால் அதற்கு முன்னர் இருந்தே நீண்ட காலம் சிறைக்குள் இருந்த பிள்ளையான் அந்த தாக்குதலுக் 03▶

# தாஜுதீன் விவகாரத்திலும் ஏமாற்றுகின்றது அநுர அரசு

## சஜித் அணி கடும் விசனம்




"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் கர்தினால் உட்பட முழு கத்தோலிக்க மக்களையும் ஏமாற்றியுள்ள அநுர அரசு, இன்று ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் விவகாரத்திலும் அவ்வாறே செயற்பட்டுள்ளது. வழங்கிய எந்தவொரு வாக்குறுதியையும் அரசால் நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் கர்தினால் உட்பட முழு கத்தோலிக்க மக்களையும் ஏமாற்றியுள்ள அநுர அரசு இன்று விசாரணைகளை நிறைவு செய்வது இலகுவானதல்ல எனக் குறிப்பிடுகின்றது.

இதேவேளை வசீம் தாஜுதீன் கொலை தொடர்பான பழியை ஓரிரு மாதங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட கஜ்ஜா என்ற நபர் மீது சுமத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் கஜ்ஜா என்பவரது மகன் ஊடகவியலாளர் மாநாடொன்றை ஏற்பாடு செய்து மேலும் பல முக்கிய விடயங்களைத் தெரிவித்திருக்கின்றார்.

தாஜுதீன் விவகாரத்தைப் பொலிஸ் ஊடாகப் பிரசாரத்தை முன்னெடுப்பதற்கு அரசு முயற்சித்த போதிலும், தற்போது அந்த முயற்சி தோல்வியடைந்துள்ளது.

லசந்த விக்கிரமதுங்க மற்றும் பிரகீத் எக்னெலிகொட போன்ற ஊடகவியலாளர்களின் படுகொலை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனக் கூறப்பட்ட போதிலும், இதுவரையிலும் அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வழங்கிய எந்தவொரு வாக்குறுதியையும் அரசால் நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது." – என்றார்.

# வடபகுதி மீனவர்களின் வலைகளை அறுத்துச் சென்ற இழுவைப்படகுகள்

வடக்கு கடற்பரப்பில் நேற்று முன்தினம் நள்ளிரவு நூற்றுக்கணக்கான இந்திய இழுவைப்படகுகள் பிரவேசித்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில், மயிலிட்டி, பருத்தித்துறையை சேர்ந்த பல மீனவர்களின் வலைகள் அறுத்தழிக்கப்பட்டுள்ளன என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் பல லட்சம் ரூபா இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட படகு உரிமையாளரான மயிலிட்டியை சேர்ந்த சுப்பிரமணியம் றசியசிங்கம் என்பவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

"கீரிமலைக்கும் மாதகலுக்கும் இடைப்பட்ட கடலில் வலைகளை விரித்துவிட்டு காத்திருந்த போது நூற்றுக்கு மேற்பட்ட இந்திய இழுவைப்படகுகள் அத்துமீறி பிரவேசித்திருந்தன. இதையடுத்து வலைகளை இழுப்பதற்குள் இந்திய படகின் மூலம் வலைகள் அறுத்தழிக்கப்பட்டுள்ளன.

சுமார் பத்து கடல் மைல் தூரத்திற்கு உள்ளாகவே இது நடந்துள்ளது. இவ்வாறு வந்த இந்திய படகுகள் மின் விளக்குகளை அணைத்துவிட்டு வந்ததன் காரணமாக, அண்மையில் வந்த பின்னரே உணரக் கூடியதாக இருந்தது.

தற்போது அறமாஸ் வகை மீன் பாடு காணப்படுகிறது. இதையடுத்து புதிதாக மூன்றரை இஞ்சி வலைகள் சீராக்கி ஒரு சில தடவைகள் கடலுக்கு சென்றிருந்த நிலையில், இந்த அநியாயம் இடம்பெற்றுள்ளது. இன்னும் வலை சீராக்கின கூலி கூட குடுக்கவில்லை. பல லட்சம் ரூபாவில் வலைகளை சீராக்கி தொழிலை தொடங்குவதற்கு முன்னரே இந்த அநியாயம் நடந்திருக்கு. கிட்டத்தட்ட 4 லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இவ்வாறு அறுத்தழிக்கப்பட்டுள்ளன." என்றார்.

# நெடியகாடு பிள்ளையார் ஆலயத்தில் மகிடா சூர வதம் நேற்று இடம்பெற்றது









வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் நெடியகாடு பிள்ளையார் ஆலயத்தில் மகிடா சூர வதம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

## மனிதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், யாழ்ப்பாணம், செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் அடுத்தகட்ட அகழ்வுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் அலுவலக மட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

உரிய நடைமுறைகளை விரைவில் பூரணப்படுத்தி, தேவையான நிதியை வழங்க நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, மனிதப் புதைகுழி அகழ்வுக்கான நிதி விடயத்தில் எவ்வித சிக்கல்களும் இல்லை என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார சுட்டிக்காட்டினார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குரிய முழுமையான சூத்திரதாரியாக இருந்திருக்க முடியாது. பிளையானை யும் தாண்டி, வெளியில் அந்த தாக்குத லோடு தொடர்புடைய பிற நேரடித் தரப்புகள் குறித்து ஆளும் தரப்பு இன் னும் மூச்சு விடவில்லை.

ஆக, அண்மையில் அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அங்கு இலங்கையர்கள் மத்தியில் உரையாற்றுகையில், ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக சில இராணுவத்தினரைக் கைது செய்து விசாரணை செய்ய வேண்டிய இருப்பதாக மட்டும் கோடி காட்டி இருக்கிறார். ஆனால் அது இப்போதைக்கு நடைபெறுவதாகத் தெரியவில்லை.

இந்த விடயங்களில் அதிகம் பரிச் சயம் உள்ள - நேரடி விசாரணை தரப் புகளுடன் தொடர்புபட்ட - முக்கிய வட்டாரம் ஒன்றுடன் பேசினேன். அத் தரப்பு கோடி காட்டிய விடயம் அதிர்ச்சி தருவதாக இருந்தது.

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக படைத்தரப்பினர் மீது கை வைக்க அல்லது படைத் தரப்பை விசாரணைக்கு உட்படுத்த அதிகாரத் தரப்பினர் பின்னடிப்பதற்கு சிக்கலான சில காரணங்கள் உள்ளன என்கின்றது அந்த வட்டாரம்.

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்த வேண்டிய படைத்தரப்புகள் 2009 யுத்தம் முடியும் காலகட்டம் வரை அந்த யுத்தத்தில் முக்கியமான - பிர தான - பங்களித்தவை. யுத்தத்தின் இறுதிக் கட்டம் வரை இடம்பெற்ற பல விடயங்களில் சம்பந்தப்பட்டவை. வெளிப்படுத்தப்படாத பல உண்மைகளை அறிந்து வைத்திருக்கின் றவை. அந்த உண்மைகள் அந்தத் தரப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்படு மானால் - அம்பலப்படுத்தப்படுமானால் - இப்போதைய நிலையில் கொழும்பு அரசுக்கும், ஆட்சி பீடத்துக்கும், படைத் தரப்புக்கும் பெரும் நெருக்கடி விவகா ரமாக அது மாறிவிடும் என்று கூறப் படுகின்றது.

ஏற்கனவே பாலியல் பலாத்காரம் மற்றும் கொலைக் குற்றச்சாட்டுக்காக சோமரத்ன ராஜபக்ஷ உட்பட கீழ்மட்ட இராணுவச் சிப்பாய்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்த விடயமே இப் போது செம்மணிப் புதைகுழி வரை பூதாகரமாகக் கிளம்பி, விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றது.

இச்சமயத்தில், ஈஸ்டர் ஞயிறு தொடர்க் குண்டுத் தாக்குதல் தொடர் பான விடயங்களுக்காக சந்தேகத்திற் குரிய இராணுவ உயர் மட்டங்களைக் கைது செய்து விசாரணை உட்படுத் தினால், 2009 இறுதி யுத்தம் வரை இடம்பெற்ற பல சம்பவங்கள் தொடர் பாக - குறிப்பாக விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு நேர்ந்த கதி தொடர் பான விடயங்கள் உட்படப் பல விவரங் கள், விவகாரங்கள் - பேரதிர்ச்சி தரு வனவாக அந்த வட்டாரங்களில் மூலம் அம்பலமாகும், அவை சர்வதேச நெருக் கடிகளை கொழும்பு ஆட்சிப் பீடத்துக் குக் கழுத்தை நெருக்குவன போல உருவாகக் கூடிய சூழல் உண்டு, ஆகை யினால் ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டு தாக்குதல் விசாரணை தொடர் பில் சந்தேகத்துக்குரிய இராணுவ தரப்புகளுக்கு எதிராக விசாரணையை ஆரம்பித்து, நாட்டின் தலையில் மண் ணள்ளிப் போட்டுக் கொள்வதா என்ற நெருக்கடியில் அரசு தலைமை தள்ளா டுவதாக அந்த வட்டாரம் தெரிவித்தது.

காலம் வரும்போது இவ்விடத்தில் மேலும் சில விவரங்களை அவிழ்த்து விட முடியும் என்று நினைக்கிறேன். அதுவரைப் பொறுத்திருப்போம்.

* * *

புதிதாக ஆரம்பித்து, வெளியாகத் தொடங்கி ஒரு சில வருடங்களுக்குள் ளேயே தமிழ் மக்கள் மத்தியில் ஆணித் தரமாகக் கால் பதித்து நிலைத்து நிற்கும் பத்திரிகை 'தமிழன்'. அதன் ஆசிரியர் நண்பர் ஆர்.சிவராஜா.

'தமிழன்' பத்திரிகையை வெளியிடும் லிபர்ட்டி பப்ளிகேஷன் நிறுவனத்தினு டைய பணிப்பாளர்களில் ஒருவராக அவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

சிங்கள ஊடக நிறுவனம் ஒன்றின் தமிழ் வெளியீட்டின் பத்திரிகை ஆசிரி யராக பணிபுரியும், அதே சமயம் அந்த ஊடக நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவராக அவர் நியமிக்கப்பட்டமை பெருமைக்குரிய ஒன்று.

இந்தப் பெருமையை முதலில் பெற் றவர் எங்களில் பலரின் ஊடக ஆசா னும், தமிழ்ப் பத்திரிகை துறையில் தனித்துவமான 'ஊடக ஜாம்பவான்' என மதிக்கப்பட்டு வருபவருமான எஸ்.டி.சிவநாயகம் ஐயா அவர்கள்தான்.

'தவஸ', 'ரிவிரஸ', 'சன்', 'வீகஎண்ட்', 'தினபதி', 'சிந்தாமணி' ஆகிய பத்திரிகை களை வெளியிட்ட சுயாதீன பத்திரிகை சமாஜத்தின் இயக்குநர்களில் ஒருவராக 'தினபதி', 'சிந்தாமணி' ஆசிரியர் சிவ நாயகம் நியமிக்கப்பட்டமை மெச்சத் தகுந்த விடயமாக அந்தச் சமயத்தில் கருதப்பட்டது. முழு சிங்கள நிறுவனம் ஒன்றின் பணிப்பாளராக சிவநாயகம் சாதனை புரிந்தமை போல இப்போது லிபர்ட்டி பப்ளிகேஷனின் பணிப்பா ளராக சிவராஜா வந்திருக்கிறார்.

சாதாரண செய்தியாளனாக ஊடகத் துறையில் சேர்ந்து, தன்னுடைய ஊட கத்திறமையினால் இன்று அச்சு ஊட கத் துறையிலும் இலத்திரனியல் ஊட கத் துறையிலும் பெரிதும் மதிக்கப்படும் ஜாம்பவானாகத் தன் தனித்துவம் மூலம், தன் திறமை மூலம், தனது பணி மீதான சலிப்புறா ஈடுபாட்டின் மூலம், அவர் உயர்ந்திருக்கிறார். செய்தி தேடலில் அவர் காட்டும் ஈடுபாடு, மும்மொழித் திறமை, சளையாத முயற்சி, செய்திகள் தொடர்பான ஞாப கத் திறன், இலாவகமான எழுத்தோட் டம், செய்தி மூலங்களை ஆகர்ஷிக்கும் தனித்துவப் பண்பியல்பு ஆகியவை மூலம் தமிழ் ஊடகத்துறைக்கு புதிய வீரியம் பாய்ச்சும் சிவராஜா போன்ற தனித்துவத் திறமையாளர்களிடமிருந்து தமிழ் ஊடகத்துறை இன்னும் அதிகம் எதிர்பார்க்கின்றது. இத்துறையில் அடுத்த தலைமுறையை செப்பனிட்டு, மேம்படுத்தி, வழிபடுத்துவதில் அவர் காட்டும் ஈடுபாடு போற்றுதற்குரியது. அவருடன் இணைந்து ஒரு காலத்தில் பணியாற்றியமை எங்கள் எல்லோருக் கும் இனிமையான அனுபவம்.

அவரது அணியில் பங்காற்ற வாய்ப் புக் கிடைத்த ஊடகவியலாளர்கள் அந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி தம்மையும் வளர்த்து, தமிழ் ஊடகத் துறையையும் வளர்க்க வேண்டும்.

முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஊடகத்துறையில் அரும் பணியாற்றும் சிவராஜாவுக்கு கிடைத்த இந்தப் பதவி தமிழ் ஊடகத்துறையின் வளமான மேம்பாட்டுக்கு மற்றொரு வாய்ப்பு என்று நினைக்கிறேன். அவருக்குக் கிடைக்கும் இந்த மரியாதை தமிழ் ஊடகத்துறைக் கும் எங்களுக்கும் கிடைத்த பெருமை யாக நாங்கள் அனைவருமே பெருமிதம் கொள்ள முடியும்.

## விஜேராம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் உள்ள நிலையில் அவற்றை மதிப்பீடு செய்து அடையாளப்படுத்தாமல் வீட்டை ஒப்படைக்க முடியாது. மதிப்பீட்டு பணி களை மேற்கொள்ளாமல் வீட்டை ஒப் படைத்தால் "மஹிந்த ராஜபக்ஷ அரச சொத்துக்களை லொறியில் ஏற்றிச் சென்றுவிட்டார்" என்று குற்றஞ்சாட் டுவார் கள். அரச அதிகாரிகள் மதிப்பீட்டுப் பணி களை மேற்கொள்ளாத காரணத் தால் தான் இல்லத்தை இன்னும் ஒப்ப டைக்கவில்லை."

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சா ளர் மனோஜ் கமகே தெரிவித்தார்.

விஜேராம அரச உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பில் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ முன்வைத்த குற்றச்சாட்டு குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு – விஜேராம உத்தி யோகபூர்வ இல்லத்தை இதுவரையில் அரசுக்கு ஒப்படைக்கவில்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப் பிட்டுள்ளார். அரசு குறிப்பிடும் பொய் களில் இதுவும் ஒன்றாகவே காணப்ப டுகின்றது.

விஜேராம இல்லத்தை ஒப்படைக் கு மாறு ஜனாதிபதி செயலகம் 2025.09.24 ஆம் திகதியன்றுதான் உத்தியோக பூர்வமாக கடிதம் அனுப்பி வைத்துள்ளது. நிச்சயிக்கப்பட்ட காலம் ஏதும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட வில்லை.

இந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் அரசுக்குச் சொந்தமான சொத்துக்க ளும்,ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவகத்துக்கு சொந்தமான சொத்துக்களும் உள்ளன.

இந்தச் சொத்துக்களை மதிப்பீடு செய்து அடையாளப்படுத்துமாறு பொறுப் பான அரச அதிகாரிகளுக்கு நாங்கள் ஏற்கனவே அறிவுறுத்தியிருந்தோம்.

அதிகாரிகள் இங்கு வருகைதந்து குறித்த மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தாமதப்படுத்தியதால் தான் இந்த வீட்டை ஒப்படைக்கவில்லை. இல்லையென்றால் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ "மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு சொந்தமான சொத் துக்களை லொறியில் ஏற்றிச் சென்று விட்டார்" என்றும் குறிப்பிடுவார்.

இவ்வாறான பின்னணியில் அரச தகவல் திணைக்களத்தின் அதிகாரிகள் இந்த வீட்டை நேற்று காணொளியாகப் பதிவு செய்துள்ளார்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது சேறு பூசுவதற்கு ஏதாவதொரு விடயத்தை தேடிக்கொண்டு ஊடகக் கண்காட்சி நடத்துகின்றார்கள்." – என்றார்.









# சீரடி சாய்பாபாவின் மகா சமாதி தின நிகழ்வு

சீரடி சாய்பாபாவின் மகா சமாதி தினமான விஜய தசமியன்று – நேற்று – சீரடி சாயி பாபா மத்திய நிலையத்தில் விஷேட சமய அனுஷ்டானங்கள் நடை பெற்றன. காலை சீரடி சமஸ்தானம் கொடி யேற்றும் வைபவத்தை தலைவர் எஸ். என்.உதயநாயகன் ஏற்றிவைத்தார்.

அபிசேகத்திற்கான பூரண கும்பம், தங்க கிரீடம் என்பவை

சாய் பக்தர்கள் சகிதம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகின்றமையையும், பக்தர்கள் கிரீடத்தினை தொட்டு ஆசி பெறுகின்றமையையும், தங்கக் கிரீடம் அணிவிக்கப்படுகின்றமையையும் நிகழ்வில் கலந்து கொண்ட கொழும்பு மாநகர சபை மேயர் திருமதி. விராய் கெலி பல்தசாருக்கான கௌரவத்தை மகளிர் அணித்தலைவி வழங்குகின்றமை யையும் மாநகரசபை முதல்வருடன் மாநகரசபை உறுப்பினர்கள் எடுத்துக் கொண்ட படத்தினையும் காணலாம்.











# சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோரின் பெயர் விவரங்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு!

### நடவடிக்கை எடுக்க தயாராகின்றார் இளங்குமரன் எம்.பி.

(பூ.லின்ரன்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பகுதிக்கு நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் வருக்சி தந்தார்.

வடமராட்சி கிழக்கில் அண்மைக் காலமாக சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன எனவும், அதில் பிரதானமாக மணல் கடத்தல் நாளாந்தம் பொலிஸாரின் அனுமதியுடன் இடம்பெற்று வருவதாகவும் தொடர் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டு வருகின்றது.




இதன் அடிப்படையில் வடமராட்சி கிழக்கின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று மணல் அள்ளப்பட்ட பிரதேசத்தை பார்வையிட்ட இளங்குமரன் எம்.பி. பெருமளவு மணல் அள்ளப்பட்ட தாளையடி பகுதிக்கும் விஜயம் மேற்கொண்டார்.

இதன் போது மண் அள்ளப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட இளங்குமரன் மிகவும் கவலையுடன் ஊடகங்களுக்கு சில விடயங்களை வெளிப்படுத்தினார்.

வடமராட்சி கிழக்கு பகுதயில் ஒரு சிலர் தொடர்ந்து சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இதற்குப் பிரதானமான காரணமாக இருப்பவர்கள், போதைப் பொருள் கடத்தல்காரர்கள், மணல் கடத்தல்காரர்கள் போன்றோரிடம் பொலிஸார் இலஞ்சத்தை வாங்கி விட்டு இவ்வாறான செயற்பாடுகளை அனுமதிக்கிறார்கள்.

பொலிஸார் உரிய முறையில் தமது கடமைகளைச் செய்திருந்தால் இந்த வடமராட்சி கிழக்கு பகுதிகளில் சட்டவிரோத செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும்.

கடத்தல் சம்பவங்கள் ஊடாக ஒரு சிலர் அதிகளவான சொத்துக்களை சட்டவிரோதமாகக் குவித்திருக்கிறார்கள். அவர்களுடன் சேர்ந்து சில பொலிஸாரும் அதிகளவான சொத்துக்களை வைத்திருக்கிறார்கள்.

இது தொடர்பாக வடமராட்சி கிழக்கில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் சட்டவிரோத தொழில்களில் ஈடுபடுபவர்கள், அவர்களுடைய பெயர் விவரங்கள், அவர்களுக்கு உதவி செய்யும் பொலிஸாருடைய பெயர் விவரங்கள் யாவற்றையும் நாங்கள் எடுத்துள்ளோம்.இந்தப் பெயர் விவரங்களை பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கவிருக்கிறோம்.

இதனைப் பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்து அவர்களை விசாரணைக்கு அழைக்கும் போது இவர்கள் எவ்வாறு இவ்வளவு சொத்துக்களைச் சேர்த்தார்கள் என்பது தொடர்பில் அவர்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும்.

முன்னைய அரசாங்கங்கள் போன்று இந்த அரசாங்கத்திலும் கடத்தல் சம்பவங்களை செய்துவிட்டு அல்லது அவர்களுக்கு பொலிஸாரும் உதவி செய்துவிட்டுத் தப்பி விடலாம் என்று நினைப்பது தவறானது

இன்னும் மூன்று வருடங்களுக்குள் அனைவரையும் கைது செய்து சட்ட விரோத செயற்பாடுகளை முற்றாக ஒழிப்போம்.கடத்தல் சம்பவங்களில் ஈடுபடுபவர்களும் அவர்களுக்கு துணை நிற்கும் பொலிஸாரும் மிக அவதானமாக இருக்க வேண்டும். – என இளங்குமரன் எம்.பி. எச்சரித்தார்.

---

# வசீம் தாஜ்தீனின் மரணம் தொடர்பில் நாமல் பதற்றமடையத் தேவையில்லை

### பிரதியமைச்சர் மஹிந்த ஜெயசிங்க தெரிவிப்பு

வசீம் தாஜுதீனின் மரணம் தொடர்பான புதிய விசாரணைகள் குறித்து, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷ பதற்றமடையத் தேவையில்லை என்று பிரதியமைச்சர் மஹிந்த ஜெயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

“ஒவ்வொரு குற்றம், மோசடி மற்றும் ஊழல் குறித்தும் அரசாங்கம் முறையான விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளை



ட்டத்தின் முன் நிறுத்தும்.

எனவே, நாமல் ராஜபக் ஷ அல்லது வேறு யாரும் பதற்றமடையத் தேவையில்லை.

தாஜ்தீனின் மரணம் குறித்து கடுமையான சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

அவரது மரணத்திற்குப் பின்னால் ராஜபக் ஷ குடும்பத்தினர் இருப்பதாகப் பல ஆண்டுகளாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த விடயம் தொடர்பில், தற்போது விசாரணைகள் முறையாக நடத்தப்பட்டு வருகின்றன.” என்றார்.

---

# சாதாரண தர பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 9 ஆம் திகதி வரை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்

க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் ஒக்டோபர் 9 ஆம் திகதி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது,

இந்த பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கடந்த செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் நிகழ்நிலையில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இதன்படி, எதிர்வரும் ஒக்டோபர் 9ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்கான இறுதி திகதி நிறைவடையும் எனவும், விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் எந்த காரணங்களுக்காகவும் நீடிக்கப்படாது எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

0112784208 / 0112784537/ 0112785922 / 0112784422

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பருவ காலப் பரவல்

இந்தியாவில் டெல்லி பெருநகரப் பகுதி உட்பட வடக்குப் பிரதேசங்களில் ஒரு வகை இன்புளூவன்ஸா ரகக் காய்ச்சல் தொற்று வேகமாகப் பரவி வருகையில், அது இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தித் தனது கைவரிசையைக் காட்டலாம் என்று கருதப்படுவதால் அதனைத் தாங்கள் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர் என இலங்கை சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர்.

குறிப்பாக H3N2 வகை இன்புளூவன்ஸா தொற்றே வேகமாகப் பரவி வருகின்றது எனக் கூறப்படுகின்றது.

டெல்லி நகரத்தில் - ஏறத்தாழ 46 மில்லியன் மக்கள் வசிக்கும் வட இந்தியாவில் - இந்த இலையுதிர்காலத்தில் இந்த வகை இன்புளூவன்ஸாவின் குறிப்பிடத்தக்க பரவல் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

சமீபத்திய கணக்கெடுப்புகளின் படி, இந்தப் பகுதியில் உள்ள 69 வீதமான வீடுகளில் தற்போது குறைந்தது ஒருவருக்கு காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ளன. இப்பகுதியில் பரவும் இன்புளூவன்ஸா வகைகளில் H3N2 தான் தற்போது முக்கிய வகை என்பதை இந்திய மருத்துவர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

“இந்தத் தொற்று இலங்கையிலும் பரவும் ஆபத்து இருந்தாலும் அதனை எதிர்கொள்வதற்கு இலங்கை முழுத் தயார் நிலையில் உள்ளது. ஆயினும் தற்போதைய நிலைமை ஆபத்தானது அல்ல” - என்று இலங்கைப் பொதுமக்களுக்கு உறுதியளித்தார் சுகாதார பிரதி அமைச்சர் டாக்டர் ஹன்சகா விஜேமுனி.

“இது பீதி அடைய வேண்டிய ஒன்றல்ல. நாம் பார்ப்பது பருவ கால காய்ச்சல். இது பொதுவாக காய்ச்சல் மற்றும் மூக்கு ஒழுகுதல் போன்றவற்றுடன் வெளிப்படுகிறது. நமது நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பு விழிப்புடன் உள்ளது. அதனால் இந்த கட்டத்தில் தேவையற்ற கவலைக்கு எந்த காரணமும் இல்லை.” - என்று டாக்டர் விஜேமுனி கூறினார்.

இந்த வகையான இன்புளூவன்ஸா பெரும் பரவல்கள் பிராந்தியத்தில் பருவகாலங்களில் மீண்டும் மீண்டும் நிகழும் என்றும், இலங்கையில் ஏதேனும் பாதிப்புகள் அதிகரிப்பதைக் கையாள வலுவான தடுப்பு நடவடிக்கைகள் உள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், இந்தியாவில் சுகாதார நிபுணர்கள் தொடர்ந்து அதிகரித்து வரும் தொற்றுகள் வைரஸின் விரிவான பரவலை எடுத்துக்காட்டுகின்றன என்று எச்சரிக்கின்றனர். டெல்லியைத் தாண்டி பிற மாநிலங்களிலும் இத்தொற்றுகள் அதிகரித்து வருவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

எது, எப்படியாயினும், இனி வரப் போகின்ற பருவகாலம் மழை, வெள்ளம், குளிர் போன்ற நெருக்கடிகளைத் தரக் கூடியது. அத்தகைய பின்புலத்தில் இது போன்ற பருவகாலத் தொற்றுகள் மூர்க்கத்துடன் பரவினால் அது, சமூகதில் வயோதிபர்கள், மூத்த பிரஜைகள், சிறுவர்கள் போன்ற நலிவுற்ற தரப்பினரை பெரிதும் பாதிக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

எனவே எதற்கும் தாயார் நிலையில் இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்பு தயாராக இருப்பது கட்டாயமாகும்.

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 10, அராலி வீதி, 42/71 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம், இல - 39/1, அராலி வீதி, யாழ்ப்பாணத்தை நிரந்தர முகவரியாகவும் அரபாநகர், கொழும்பு வீதி, தில்லையடி, புத்தளத்தை தற்போதய முகவரியாகவும் கொண்ட நயினா முகமது மஃறாவ் என்பவர் 24.02.2003 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு M.M.M.றமீஸ் முகதாவில் 199ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம், குறித்த ஆதனம் 02.08.1989ல் நொத்தாரிசு M.M.மன்சூர் முகதாவில் சாதனம் ஒன்று நிறைவேற்றப்பட்டதாகவும் அக்காலப் பகுதியில் முஸ்லீம் சமூகத்தினர் பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலமை ஏற்பட்டது என்றும் காணிப்பதிவகத்தில் தேடுதல் செய்தும் அது தொடர்பான ஆவணங்கள் கிடைக்கவில்லை எனவும் குறிப்பிட்டு குறித்த ஆதனத்திற்கு தானே சொந்தக்காரர் எனவும் தனது ஆட்சிக்குட்பட்டது என்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை, நயினா முகமது மஃறூவ்வும் பெண் மன்சுராவும் 08.02.2012 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 8760ம் இலக்க அறுதி உறுதி மூலம் இல - 24/10A. அராலி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசைப்பிள்ளை ஆனந்தநாதனும் பெண் நாகரெத்தினமும், ஆகியோருக்கு வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "தாண்டயன் வயலும் அம்மையன் வயலும் முள்ளி வயலும்" உத்தரவு பெற்ற அளவையாளர் எஸ்.தியாகராஜா பிரிவிட்டு வரைந்த 79ம் இலக்கப் படத்தில் துண்டு 4 எனச்சுட்டப்பட்ட பாகம் நெ.பர.1க்கு சமமான குளி (12) பன்னிரெண்டும் அதற்குச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லைகள்:-

கிழக்கு :- வைரமுத்து சிவகுமாரின் ஆதனம்.

வடக்கு :- குறித்த படத்தில் துண்டு 3 எனச்சுட்டப்பட்ட பாகம்.

மேற்கு :- குறித்த படத்தில் துண்டு 5 எனச்சுட்டப்பட்ட பாதைக்காக ஒதுக்கப்பட்ட நிலம்.

தெற்கு :- குறித்த படத்தில் துண்டு 6 எனச்சுட்டப்பட்ட 10அடி அகலமான பாதை நிலம் இதடங்களும். இன்னும் குறித்த படத்தில் துண்டு 5 துண்டு 6 எனச்சுட்டப்பட்ட பாதை நிலங்களை போக்குவரத்துக்காக பாவிக்கும் உரித்தும்.

தற்போது ஆசைப்பிள்ளை ஆனந்தநாதனும் பெண் நாகரெத்தினமும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது ஆசைப்பிள்ளை ஆனந்தநாதனும் பெண் நாகரெத்தினமும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத் தருகின்றேன்.

**மாநகர முதல்வர்,**
**யாழ் மாநகர சபை.**



# இன்று வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்தில்

மனித உடலால் உணரப்படும் வெப்பநிலையானது இன்று எச்சரிக்கை மட்டத்தில் நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, பொலன்னறுவை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களின் சில பகுதிகளில், வெப்பநிலை, எச்சரிக்கை மட்டத்தில் நிலவக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

எனவே, வெப்பமான காலநிலையைக் கருத்திற்கொண்டு, வெளித் தளங்களில் உள்ளவர்கள் அதிகளவான நீரைப் பருக வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், முடியுமானவரை வெளிப்புற செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.




# தட்டடுவன்கொட்டிப் பகுதியில் கடை ஒன்றின் மீது தாக்குதல்

(பூ.லின்ரன்)

கிளிநொச்சி ஆனையிறவு தட்டுவன் கொட்டி சந்திப் பகுதியில் உள்ள பெட்டிக்கடை மீது வன்முறை கும்பல் ஒன்று தாக்குதல் நடத்திய சம்பவம் நேற்றுப் பதிவாகியுள்ளது

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:–

தட்டுவான் கொட்டி சந்தியில் உள்ள கடையில் அருகாமையில் டிப்பர்கள் நிறுத்தி வைப்பது வழக்கம். அதன் தொடர்ச்சியாக அந்த விடயத்தை ஒட்டி நேற்றைய தினம் மதியம் 12 மணியளவில் கடைக்கு இருந்த நபரிடம் சிறிய வாய்த்தக்கம் மூலம் முரண்பட்டுள்ளார்.

அப்போது கடை உரிமையாளர் இவ்விடத்தில் கெட்ட வார்த்தைகள் பேச வேண்டாம் என கூறியபோது டிப்பர் உரிமையாளர் கடையைத் தாக்கி, கடை உரிமையாளர் மீது கத்தியால் குத்த முயற்சி செய்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட போதும் நீண்டநேரமாகியும் சம்மந்தப்பட்ட இடத்திற்கு பொலிஸார் வருகை தரவில்லை எனக் கூறப்பட்டது.







# திருமலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவிலில் கேதார கௌரி விரதம் பக்திபூர்வமாக ஆரம்பம்

- எஸ்.கீதபொன்கலன் -

கேதார கௌரி விரத ஆரம்ப பூஜைகள் நேற்று திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் தேவஸ்தானத்தில் நடைபெற்றன.

நூற்றாண்டு பழமை வாய்ந்த இந்த விரத அனுஷ்டிப்பு திருகோணமலையின் பிரதான அடையாளங்களில் ஒன்றாகும்.

கேதார கௌரி விரதம் மற்றும் கையில் அணியும் நூல் காப்பு என்பவற்றுக்கு விஞ்ஞான ரீதியான தத்துவமும் கூறப்படுகின்றது.

கேதார கௌரி விரதம் என்பது சிவபெருமானும் பார்வதியும் ஒன்றிணைந்த தினமாகக் கருதப்படும் ஒரு சக்தி – சிவன் வழிபாட்டு விரதமாகும்.

இந்து சமயத்தில் இது தீபாவளிக்குப் பின் அமாவாசை முதல் கார்த்திகை மாதத்தில் அனுசரிக்கப்படுகிறது.

விரதத்தின் நிறைவு நாளில் பக்தர்கள் சிவபெருமானுக்குப் பிரத்யேக பூஜை செய்து கையில் 'நூல் காப்பு' கட்டிக்கொள்வர்.

### நூல் காப்பின் ஆன்மீகக் குறியீடு

சிவபெருமான் மற்றும் பார்வதி தேவியின் அருள், ஒற்றுமை, பாதுகாப்பு என்பதற்கான சின்னம் நூல் காப்பு.

விரதத்தில் ஈடுபட்டவர் விரதம் நிறைவு பெற்றதன் அடையாளமாகவும், அதனை மறக்காமல் கடைசி நாள்வரை காப்பாற்றும் ஒரு நினைவுச் சின்னமாகவும் நூல் காப்பு கொள்ளப்படுகின்றது.

வலது கையைச் சுற்றுவது:- நரம்பு பிணைப்புகள் அதிகம் உள்ள பகுதியில் நூல் கட்டுவது, மூளைக்குப் 'நினைவூட்டும் தூண்டுதல்' அளிக்கிறது.

மனோநிலை: ஒவ்வொரு முறை நூல் கண்ணில் படும்போது, மனதிற்கு 'விரதம் நிறைவு பெற்றது, நெறியிலிருந்து விலகக் கூடாது' என மனோவியல் கட்டுப்பாடு ஏற்படும்.

### ஆரோக்கியம் (குருதிச்சுற்றோட்டம்)

கையில் நூலைச் சுற்றுவது, மணிக்கட்டு பகுதியில் உள்ள சிறிய நாடி முனைகளை சிறிதளவு அழுத்துகிறது. இது இரத்த ஓட்டத்தை சீராக்க உதவுகிறது என்று இந்திய மரபுவழிக் கருத்தில் சொல்லப்படுகிறது.

சிவபெருமான் தொடர்பான மந்திரங்கள், பூஜைகள் நடைபெறும் பொழுது நூல்,சக்தி வாய்ந்த மந்திர ஆற்றலை உட்புகுத்தும் என நம்பப்படுகிறது.

மந்திரங்கள் உச்சரிக்கும் போது உருவாகும் ஒலி அதிர்வுகள் நூலில் தங்கி, அதை அணிந்திருப்பவருக்கு 'உடல்-மனப் பாதுகாப்பு' தரும் என்ற அடிப்படை நம்பிக்கை உள்ளது.

### உளம் சார் பாதுகாப்பு உணர்வு

"நான் இப்போது தேவியின் அருளால் பாதுகாக்கப்பட்டுள்ளேன்" என்ற நம்பிக்கை மனதில் உறுதியைக் கொடுத்து, உடல் எதிர்ப்பு சக்தியையும் மேம்படுத்தும்.

### சமூக மற்றும் உளவியல் பார்வை

சமூக ஒற்றுமை:- ஒரே நாளில் பலர் ஒரே மாதிரி நூல் காப்பு அணிவதால் சமூக ஒற்றுமை, அடையாளம் உருவாகிறது.

நிலைத்த மனப்பக்குவம்:- நூல் எப்போது கண்களில் பட்டாலும், அது நம்பிக்கையையும் பக்தியையும் தொடர்ந்து நினைவூட்டும்.கேதார கௌரி விரதத்தின் பின் கையில் கட்டப்படும் நூல் காப்பு என்பது வெறும் சமய சடங்கு அல்ல. அது –

1.ஆன்மீக பாதுகாப்பு (சிவ-சக்தியின் அருள் சின்னம்).

2.உடல் – மனம் சமநிலை (நாடி, இரத்த ஓட்டம், மனநிலை கட்டுப்பாடு).

3.சமூக அடையாளம் (ஒரே நம்பிக்கையுடன் சமூகத்தில் இணைதல்)

– என்பவற்றை ஒருங்கிணைக்கும் ஒரு 'ஆன்மீக-விஞ்ஞான நடைமுறை' எனக் கொள்ளலாம்.




# செம்மணி விடயத்தில் வாக்குறுதியை நிறைவேற்றுமா அநுர அரசாங்கம்?




வானுப்பிரியா சுபாஸ்கரசர்மா


இலங்கைத் தீவில் போரின் போது யுத்த மீறல்கள், காணாமல் போதல்கள், படுகொலைகள் இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் பல வெளிவந்த நிலையில் செம்மணி சித்துபாத்தி மனித புதைகுழி இந்த விடயங்களில் சர்வதேசத்தினதும் ஐ.நாவினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

யாழ் குடா நாடு விடுதலைப் புலிகளிடம் இருந்து இலங்கை இராணுவத்தால் மீட்கப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட பலர் கொல்லப்பட்டு செம்மணி சித்துபாத்தி மனித புதைகுழியில் புதைக்கப்பட்டுள்ளனர் என தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதனை வலுப்படுத்தும் முகமாக செம்மணி பகுதியில் இராணுவத்தால் கொல்லப்பட்டு பலர் புதைக்கப்பட்டனர் எனவும், அது தொடர்பில் சாட்சியமளிக்க தயார் எனவும் மாணவி கிருஷாந்தி கொலை வழக்கில் மரணதண்டனை கைதியாகவுள்ள இராணுவ கோப்ரல் சோமரட்ண ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்த விசாரணையை முன்னெடுக்க சாட்சிகள் கிடைத்துள்ளன. சுயாதீனமான நீதித் துறைக்குள் கடந்த காலங்களைப் போல் அல்லாமல் அரசியல் தலையீடுகளின்றி விசாரணைகள் இடம் பெறுவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் இரண்டு கட்ட அகழ்வுப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் 239 எலும்புக் கூடுகளும், 72 சான்றுப் பொருள்களும் கிடைத்துள்ள நிலையில் அவை அங்கு நடந்த கொடூரத்தை வெளிப்படுத்தும் சான்றுகளாகவுள்ளன. அங்கு புதைக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் 14 இடங்களில் குவியல்களாகவும், சில இடங்களில் ஒன்றன் மேல் ஒன்றாகப் போடப்பட்டனவாகவும் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அமர்ந்த நிலையில் ஓர் எலும்புக் கூடு மீட்கப்பட்டுள்ளது. சிறியவர்களின் எலுப்புக்கூடுகள், சிறுவர்கள் விளையாடும் பொம்மைகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளமையுடன், அதிகமான மனித எலும்புக் கூடுகள் ஆடைகளற்ற நிலையிலேயே புதைக்கப்பட்டுள்ளன. இதனை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சுட்டிக் காட்டியுள்ளது.

தமிழர் என்ற காரணத்திற்காக ஒன்றுமறியா பாலகர்கள் முதல் முதியவர்கள் வரை கொல்லப்பட்டுள்ளமை தெரிகிறது. இவை செம்மணியில் நடந்த கொடூரம், அரச படைகளின் மிலேச்சத்தனம் என்பவற்றை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளமையுடன், இனப் படுகொலைக்கான சாட்சியங்களாகவும் உள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை விஜயம் செய்த போது செம்மணிக்கு சென்று பார்வையிட்டு இருந்தமையுடன் 'அணையா விளக்கு' போராட்டத்தில் ஈடுபட்ட – பாதிக்கப்பட்ட – தமிழ் மக்களினது துயரங்களையும் அவதானித்து இருந்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரில் செம்மணி மனித புதைகுழி தொடர்பாக கரிசனை காட்டிய பிரித்தானியா நீதியான விசாரணை இடம்பெற வேண்டும் என்றும் வலியுறுத்தி இருந்தது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரும் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களை உணர்ந்தவராக செம்மணி விடயத்தில் கரிசனை காட்டியிருந்தார்.

வலிந்து காணாமல் போனவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 29 ஆவது அமர்வு கடந்த 22 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகிய நிலையில், இலங்கை தொடர்பான விவகாரம் ஆராயப்பட்டது. இதன்போது இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகள் விவகாரத்தில் சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து தடயவியல் விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.



இலங்கை சார்பில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையிலான தூதுக் குழு இதனை அறிவித் துள்ளது.

அநுர தலைமையிலான இந்த அரசாங்கத்திற்கு செம்மணி விவகாரம் உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் நெருக்கடியை கொடுத்துள்ளது. இதனை சமாளிக்கும் வகையில்தான் அரசாங்கத்தின் கருத்துக்கள் உள்ளனவா என்பது பாதிக்கப்பட்ட தமிழ் தேசிய இனத் தின் ஏக்கமாக உள்ளது. கடந்த காலங்களில் அவ்வாறே நடந்தது. ஆனால் இந்த விடயத்தில் அரசாங்கம் எவ்வாறு நடந்து கொள்ளப் போகின்றது என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

காணாமல் போனவர்களின் எண்ணிக்கை சுமார் 12 ஆயிரத்து 600 என்று இருந்தாலும், உண்மையில் இந்த எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கும் அதிகமாக இருக்கலாம் என்று சில மதிப்பீடுகள் தெரிவிப்பது குறித்துக் ஐ.நாவில் கவலை வெளியிடப்பட்டது.

காணாமல்போனோர் அலுவலகத்திடம் சுமார் 23,300 காணாமல் போனோர் வழக்குகள் உள்ளன. இதில் 3 ஆயிரத்து 700 இராணுவ அதிகாரிகள் மற்றும் சுமார் 16 ஆயிரம் பொதுமக்கள் அடங்குவர். காணாமல் போனவர்களில் சுமார் 93 சதவீதமானோர் ஆண்கள் என்றும், 33 சதவீதமானோர் 19 முதல் 35 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் இதன்போது இலங்கை தூதுக் குழு தெரிவித்துள்ளது.

மூன்றாவது கட்ட அகழ்வுப் பணி தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அதற்கான நிதி மற்றும் ஏனைய விடயங்களை அரசாங்கமே செய்து கொடுக்க வேண்டும். அதனை விரைவாக செய்து கொடுப்பதுடன் ஐ.நாவில் வழங்கிய வாக்குறுதி போன்று சர்வதேசத்தின் ஒத்துழைப்பையும் இதய சுத்தியுடன் அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

ஆக, இலங்கையில் கண்டுபிடிக்கப்படுகின்ற ஒவ்வொரு மனிதப் புதைகுழியும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நடந்த கொடூரத்தையே வெளிப்படுத்துகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களினது தாய்மாரும் உறவுகளும் பல ஆண்டுகளை கடந்து போராடி வருகின்றனர். அவர்களில் பல தாய்மார் தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமலேயே மரணித்தும் உள்ளனர். இந்த தாய்மாரின் துயரங்களையும் அவர்களது நிலையையும் உணர்ந்து அரசாங்கமும் சர்வதேச சமூகமும் செயற்பட வேண்டும்.

செம்மணி போன்ற மனித புதைகுழிகளின் விசாரணையை நீதியாக முன்னெடுத்து சம்பந்தப்பட்ட படைத் தரப்பை சேர்ந்தவர்களுக்கு தண்டனையை பெற்றுக் கொடுப்பதன் மூலம் குறைந்தபட்சம் பரிகார நீதியை என்றாலும் பெற்றுக் கொடுக்க முடியும். அது பாதிக்கப்பட்ட தமிழ் தேசிய இனத்திற்கு ஆறுதலாக அமையும்.




# காத்தான்குடியில் திருட்டுப்போன பசுமாடு ஒன்று இறைச்சிக்கு வெட்டிய நிலையில் கண்டுபிடிப்பு!

## மற்றைய இரண்டு உயிருடன் மீட்பு; இருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் புற்று நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரின் வாழ்வாதாரத் துக்காக வளர்த்து வந்த 3 பசு மாடு களைத் திருடிச் சென்று அதில் 5 லட்சம் ரூபா பெறுமதியான ஒரு பசு மாட்டை வெட்டி இறைச்சியாக்கி சம்பவம் தொடர்பாக காத்தான்குடியைச் சேர்ந்த இறைச்சி கடை உரிமையாளர் மற்றும் பசுவை திருடிச் சென்று விற்பனை செய்த அதே பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உட்பட இருவரை நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கைது செய்தமையுடன் திருட்டுப் போன மற்றைய இரு மாடுகளை உயிருடன் மீட்டுள்ளனர் எனவும் கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி மேலும் தெரியவருவ தாவது:-

கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள உறுகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த - புற்று நோயால் பாதிக்கப்பட்ட - ஒருவர் தனது வாழ்வாதாரத்துக்காக உறுகாமத் தில் உள்ள தோட்டம் ஒன்றில் 3 பசுமாடு களை கட்டி வளர்த்து வந்தார். இதில் பசு மாடு ஒன்றில் இருந்து தினமும் காலையில் 15 லீற்றர் மாலையில் 15 லீற்றர் பாலை கறந்து விற்பனை செய்து வருகிறார்.

இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு தோட்டத்தில் அமைந் துள்ள குடிசையில் நித்திரை செய்துவிட்டு அடுத்த நாள் காலையில் எழுந்து பார்த்த போது கட்டியிருந்த 3 மாடுகளும் திருட்டுப் போய் உள்ளமையைக் கண்டு கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதையடுத்து காத்தான்குடியில் உள்ள மாடு வெட்டும் மடுவத்தில் திருடிச் சென்ற பசு மாட்டை இறைச்சிக்காக வெட்டுகின்றனர் என மாட்டின் உரிமை யாளருக்குத் தகவல் ஒன்று கிடைத்ததை அடுத்து நேற்று முன்தின்ம் புதன் கிழமை இரவு மாட்டின் உரிமையாளர் காத்தான்குடி பொலிஸாருடன் மாடு வெட்டும் மடுவத்தை சுற்றிவளைத்த போது அங்கு திருட்டு போன பசு மாடு இறைச்சிக்காக பொது சுகாதார பரிசோ தகரின் அனுமதியுடன் வெட்டி இறைச்சி யாக்கப்பட்டமையைக் கண்டுபிடித்த மையுடன் வெட்டிய பசு மாட்டின் தலையையும், மற்றைய இரு மாடுக ளையும் உயிருடனும் மீட்டனர்.

இதனை தொடர்ந்து இறைச்சி கடை முதலாளியைக் கைது செய்து விசா ரணை செய்தனர். அவர் அந்தப் பகுதி இளைஞர் ஒருவர் தனது மாடுகள் என தனக்கு பணத்திற்கு அவற்றை விற் பனை செய்தார் எனவும் அவரிடம் இருந்து அதற்கான கடிதத்தை எழுத்து மூலம் பெற்று அதற்கான பணத்தை வழங்கியுள்ளார் எனவும் பொலிசஸ ாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதையடுத்து திருடிய மாடுகளை விற்பனை செய்தவர் எனக் கூறப்படும் அந்தப் பகுதியை சேர்ந்த இளைஞனை பொலிஸார் கைது செய் தனர்.

இது தொடர்பான விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமையுடன் கைது செய்யப்பட்ட இருவரையம் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை முன்னெடுத்து வருகின்ற னர் எனவும் பொலிஸெ தெரிவித்தனர்.

இதேவேளை கரடியனாறு பொலிஸ் பிரிவில் கடந்த மாதம் மட்டும் 25 மாடுகள் காணாமல் போயுள்ளன என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# வீடமைப்பு அதிகார சபையினரால் வழங்கப்பட்ட வீடுகள் கையளிப்பு

(பூ.லின்ரன்)




யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட ரூபா ஒரு மில்லியன் பெறுமதியான நான்கு வீடுகலை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், கட்சியின் பிரதேச அமைப்பாளர் சாம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு வீடுகளை நாடவெட்டி சம்பிர்தாயபூர்மாக திறந்துவைத்து பயனாளிகளிடம் கையளித்தனர்.

இதேவேளை இங்கு கருத்து தெரிவித்த அமைப்பாளர் சாம் -

அம்பன் கிழக்கின் பல வீதிகள் இன்னும் போடப்படாமலும் சீர் செய்யப்படாமலும் இருக்கின்றமையால் அவை தொடர்பில் கவனமெடுத்து அவற்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித் தார்.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக தலைமை கிராம சேவையாளர் தோமஸ் யூட், கிராம சேவையாளர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# வவுனியா மாநகர சபையின் செயற்பாடுகள் ஆளும் தரப்பின் பிரதிநிதிகள் கலந்தாய்வு!

(கி.வசந்தன்)

வவுனியா மாநகர சபையின் செயற்பாடுகளை திறம்பட முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் மாநகர சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இவ்விடயத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் உள்ள முரண்பாடுகளைக் களைந்து அவர்களுக்கான ஒதுக்கீடுகளையும் சீரான முறையில் வழங்குவது தொடர்பாக ஆளும் கட்சிக்கு ஆதரவாக செயல்பட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் நேற்று வுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கலந்துரையாடினர்.

இதன்போது மாநகர சபையின் முதல்வர் உட்பட்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கட்சிகளின் தரப்பில், தமிழரசுக் கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம், தமிழீழ விடுதலை இயக்கம் சார்பில் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சிறிரெலோ கட்சியின் சார்பில் கட்சியின் தலைவர் ப. உதயராசா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் சார்பில் க. துளசி, தமிழ் காங்கிரஸ் சார்பில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ். தவபாலன், அகில இலங்கை மக்கள் சக்தி சார்பில் அதன் பங்காளி கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் மாநகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது பல்வேறு முடிவுகள் சாதகமாக எட்டப்பட்டன என செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.
















# ஏற்றுமதியாளர்களுக்கான வரியை நீக்க வேண்டாம்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

இலங்கை ஏற்றுமதிகளுக்கான, இலகுப்படுத்தப்பட்ட பெறுமதிசேர் வரியை இரத்துச் செய்ய வேண்டாம் என, எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை சந்தித்தப் போது அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

சஜித் பிரேமதாஸ, சர்வதேச நாணய நிதியக் குழுவின் தலைவர், இவான் பாபகேர்ஜியோ மற்றும் வதிவிட பிரதிநிதி மார்த்தா வேர்ல்ட்மைக்கேலை நேற்று கொழும்பில் சந்தித்துள்ளார்.

இதன்போது, இலகுப்படுத்தபப்பட்ட பெறுமதிசேர் வரி இரத்துச் செய்யப்பட்டால், இலங்கை ஏற்றுமதியாளர்கள் பாதிக்கப் படுவார்கள் என அவர் சுட்டிக்காட் டியுள் ளார். அத்துடன், தனது கோரிக்கையை பரிசீலிக்குமாறு சஜித் பிரேமதாஸ சர்வ தேச நாணய நிதியத்தின் அதிகாரிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.





















## வடக்கில் போதைப்பொருளுக்கு அடிமையாவோருக்கு

# புனர்வாழ்வு நிலையம் அமைத்தல்; ஆளுநர் தலைமையில் மீளாய்வு!

வடக்கு மாகாணத்தில் உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையாவோருக்கு புனர்வாழ்வு வழங்கும் வகையில் புனர்வாழ்வு நிலையம் அமைத்தல் மற்றும் உதவிநாடும் நிலையம் அமைத்தல் தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் மீளாய்வு ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகத்தின் பங்கேற்புடன் கடந்த ஜுலை மாதம் ஆளுநர் செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது. அதன் போது ஆராயப்பட்ட விடயங்களின் முன்னேற்றம் தொடர்பில் நேற்றைய கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் குருநகரிலும், முல்லைத்தீவில் ஒட்டுசுட்டானிலும், மன்னாரில் முருங்கனிலும் உள்ள மருத்துவமனைகளில் உதவிநாடும் நிலையங்கள் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. குருநகர் மருத்துவமனையின் திருத்த வேலைகள் நிறைவுறுவதற்கு கால அவகாசம் தேவை என்பதால், அதுவரையில் பிறிதொரு மருத்துவமனையில் உதவிநாடும் நிலையம் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டான் மற்றும் முருங்கன் மருத்துவமனைகள் தயார் நிலையில் உள்ளமையால் அவற்றில் உடனடியாக உதவிநாடும் நிலையங்களை ஆரம்பிப்பதற்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

புனர்வாழ்வு நிலையத்தை நிரந்தரமாக அமைப்பதற்கு யாழ்ப்பாணம் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் காணி ஒதுக்கப்பட்டு இது தொடர்பான கடிதம் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட செயலர் குறிப்பிட்டார்.

புனர்வாழ்வு நிலையம் நிரந்தரமாக அமைக்கப்படும் வரையில் கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தில் அல்லது முல்லைத் தீவில் இயக்குவது தொடர்பில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அங்குள்ள கட்டடங்கள் தொடர்பில் முழுமையான ஆய்வை மேற்கொள்வதற்காக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் குழுவினரும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழான குழுவினரும் இணைந்து விரைந்து களப்பயணம் மேற்கொள்வது என்றும் இந்த ஆண்டு இறுதிக்குள் ஏதாவது ஓரிடத்தில் புனர்வாழ்வு நிலையத்தை ஆரம்பிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை கடுமையாக அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஆளுநர், தன்னை நேற்று முன்தினம் புதன்கிழமை சந்தித்த மாணவர்கள் அது தொடர்பில் பல்வேறு விடயங்களை வெளிக்கொண்டு வந்தமையும் இங்கு குறிப்பிட்டார். எனவே விழிப்புணர்வு செயற்பாடுகளை விரிவுபடுத்துவதுடன் விரைவுபடுத்துவதன் தேவைப்பாட்டையும்ஆளுநர்வலியுறுத்தினார்.சில பாடசாலைகள் விழிப்புணர்வுச் செயற்பாட்டுக்கு ஒத்துழைக்காமை தொடர்பாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. அவ்வாறு எந்தவொரு பாடசாலையும் அவ்வாறு ஒத்துழைக்காமல் இருக்க முடியாது எனக் குறிப்பிட்ட ஆளுநர், அது தொடர்பில் இறுக்கமான அறிவுறுத்தல்களை வழங்க பிரதம செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

அதேநேரம், ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு செயற்பாடுகள், மாகாண மற்றும் மத்திய அரசுகளின் கீழ் பணியாற்றும் பொருத்தமான கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் ஆகியனவற்றை தொடர்ந்து முன்னெடுக்கவும், இது தொடர்பான ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவுறுத்தல்களை வழங்குமாறும் பிரதம செயலாளரை ஆளுநர் அறிவுறுத்தினார்.

பாடசாலை இடைவிலகல் தொடர்பான தகவல்கள் உரிய நேரத்துக்கு உரிய திணைக்களங்களுக்கு பகிரப்படுவது தொடர்பான பொறிமுறையை உருவாக்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மேலும், போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாட்டை முன்னெடுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் திணைக்களங்களின் கண்காணிப்பில் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறும் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதேநேரம், சில வலி நிவாரணிகளை உயிர்கொல்லி போதை மாத்திரைகளாகப் பயன்படுத்துவது தொடர்பில் கடந்த கூட்டங்களில் ஆராயப்பட்டிருந்தது. அது தொடர்பில் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களிடம் கண்காணிப்பை இறுக்குவது தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் முன்னேற்றகரமான நிலைமை காணப்படுவதால் வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களிலும் இதே நடைமுறையைப் பின்பற்றுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரை ஆளுநர் அறிவுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்ட செயலர்கள், வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், யாழ்ப்பாணப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர், தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றனர்.







# மதுபானக் கடைகள் இன்று மூடப்படும்!




சர்வதேச மது ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியாக உரிமம் பெற்ற அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் இன்று வெள்ளிக்கிழமை மூடப்படும் என்று கலால் துறை அறிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட சட்டத்தை மீறும் மதுபானக் கடைகள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கலால் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது..

# மதுபோதையில் வாகனங்களை செலுத்திய 26 சாரதிகள் கைது!



நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 26 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை நேற்றுமுன்தினம் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 701 பேரும், சந்தேகத்தின் பேரில் 21 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 274 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 157 பேரும், கவனக் குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 14 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4 ஆயிரத்து 92 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# ஹயஸ் வான் மோதி வயோதிபர் மரணம்!



ஹயஸ் வான் மோதி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து மஹவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அநுராதபுரம் – பாதெனிய வீதியில் இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரத்தில் இருந்து பாதெனிய நோக்கிச் சென்ற ஹயஸ் வான், வீதியைக் கடக்கும் பாதசாரி ஒருவர் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பாதசாரி பலத்த காயமடைந்து அம்பன்பொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் அம்பன்பொல பகுதியைச் சேர்ந்த 71 வயதுடைய வயோதிபர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் அம்பன்பொல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய ஹயஸ் வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹவ பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# நான்கு வயது சிறுவன் கிணற்றில் வீழ்ந்து பலி!

நவகமுவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் பின்புறத்தில் அமைந்துள்ள கிணற்றில் வீழ்ந்து சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

4 வயதுடைய சிறுவனே உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சிறுவன் நவகமுவ பிரதேசத்தில் நடைபெற்ற உலக சிறுவர் தினக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு பரிசுகளை வென்று மீண்டும் வீடு திரும்பியுள்ளார்.

பின்னர் இந்தச் சிறுவன் வீட்டினுள் விளையாடிக்கொண்டிருந்துள்ள நிலையில், பெற்றோரின் அவதானத்தைக் கடந்து வீட்டின் பின்புறத்தில் அமைந்துள்ள கிணற்றுப் பக்கம் சென்றுள்ளார்.

இதன்போது சிறுவன் கிணற்றில் வீழ்ந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நவகமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரிஷாத்தின் மனு மீதான விசாரணை மார்ச் 25 இல்



முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் 2021 ஆம் ஆண்டு நியாயமான காரணங்கள் இன்றி கைது செய்யப்பட்டு தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டதை எதிர்த்து, தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று வியாழக்கிழமை உயர்நீதிமன்ற நீதிபதிகளான ஷிரான் குணரத்ன, அச்சல வெங்கப்புலி மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய அமர்வு முன்னிலையில்அழைக்கப்பட்டது.

இதன்போது, மனுவை 2026 மார்ச் 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என அறிவிக்கக் கோரி அடிப்படை உரிமைகள் மனுவை அவர் தாக்கல் செய்திருந்தார்.

# பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "பியூமா"வுக்கு விளக்கமறியல் நீடிப்பு



பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "பியூமா" என்று அழைக்கப்படும் பியூமி ஹஸ்திக என்பவரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள "பியூமா" கடும் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது நீதிமன்றத்தில் ஆஜரான பொலிஸார், "பியூமா" தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவித்துள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்ட நீதிவான் "பியூமா"வை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

"பியூமா", போதைப்பொருள் கடத்தல்காரரும் பாதாள உலகக் கும்பலின் தலைவருமான "குடு சலிந்து" என்று அழைக்கப்படும் சலிந்து மல்ஷிக என்பவரின் முக்கிய உதவியாளர் ஒருவர் ஆவார்.

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "பியூமா" டுபாயில் வைத்து கைது செய்யப்பட்டு கடந்த 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி அன்று இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டு பின்னர் நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பில் விஜய்யின் இதயத்தில் வலி இல்லை

## சீமான் தெரிவிப்பு

"த.வெ.க. தலைவர் விஜய் காணொலியை பார்க்கும்போது அவரது இதயத்தில் வலியோ, காயமோ இல்லை என்பது தெரிகிறது. அப்படி, இருந்திருந்தால் அந்த மொழியில் வெளிப்பட்டிருக்கும்."

– இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

விருதுநகரில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"விஜய் சென்றதால்தான் அங்கு கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதற்கு காரணம் யார்? ஆனால், அவர் இதயத்தில் வலியோ, காயமோ இல்லை. திரைப்படத்தின் வசனம் போல காணொலியில் பேசியுள்ளார். இது நல்ல அணுகுமுறை இல்லை.

மற்ற இடத்தில் இல்லாமல் கரூரில் மட்டும் இப்படி நடந்தது எப்படி என விஜய் கேட்பது தவறு. மற்ற இடங்களிலும் இப்படி நடக்க வேண்டும் என அவர் நினைக்கிறாரா? கூட்டத்தில் கத்தியுடன் புகுந்தவர்கள் தாக்கினார்கள் என்று சொன்னார்கள். ஆனால், மருத்துவமனையில் இருக்கும் ஒருவருக்குக் கூட கத்திக் குத்து காயம் இல்லாதது எப்படி? நானே நேரில் சென்று பார்த்தேன். கரூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு கூட கத்திக் குத்து காயம் இல்லை. விஜய்க்கு சுய சிந்தனை இருக்கிறது என்றால் எதற்கு அருகில் ஆள் இருக்க வேண்டும்?

காணொலியில் பேசும்போது அவர் வலியை கடத்தி இருக்க வேண்டும், ஆனால் அவர் கடத்தவில்லை. சி.எம். சார் என்று கூப்பிடுவதே சின்ன பிள்ளைகள் விளையாட்டாக பேசுவதுபோல் இருக்கிறது. முதல்வர் மேல் அவருக்கு மரியாதை இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர் இருக்கும் நாற்காலி பல தலைவர்கள் இருந்த இடம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# விஜய் மீது வழக்கு பதிவு செய்ய தமிழ் நாடு அரசு அஞ்சுகின்றதா?

## திருமாவளவன் கேள்வி





தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் மீது வழக்குப் பதிவு செய்த பொலிஸ், விஜய் மீது ஏன் வழக்குப் பதிவு செய்யவில்லை என வி.சி.க. தலைவர் திருமாவளவன் கேள்வி எழுப்பியுள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் திருச்சியில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"த.வெ.க. தலைவர் விஜய் மீது வழக்குப் பதிவு செய்ய தமிழக அரசு, பொலிஸ் அஞ்சுகின்றனவா? த.வெ.க. பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் மீது வழக்குப் பதிவு செய்த பொலிஸ், விஜய் மீது ஏன் வழக்குப் பதிவு செய்யவில்லை எனக் கூற வேண்டும்.

இருவரும் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள். இருவருக்கும் வேறு வேறு நீதியா? விஜய் மீது வழக்குப் பதிவு செய்யாததற்கு தி.மு.க – த.வெ.க. இடையே மறைமுக "டீலிங்" உள்ளதா என கேள்வி எழுப்பலாமா? பொலிஸ் இது போன்ற ஓர வஞ்சனையை நிறுத்திக் கொள்ள வேண்டும். விஜய் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டாம் என யார் அழுத்தம் கொடுத்தது.

"ஹஸ்கி வொய்ஸில்" பேசினால் சோகம் என நம்பி விடுவார்கள் என விஜய் காணொலியில் அவ்வாறு பேசியுள்ளார். மூன்று நாள்கள் சும்மா இருந்துவிட்டு ஆர்.எஸ்.எஸ். தலைமை சொன்னதும் காணொலி வெளியிடுகிறார். கரூர் துக்க சம்பவம் நடந்த அடுத்த நாளாவது, விஜய் ஓர் இரங்கல் கூட்டம் நடத்தியிருக்கலாம். அஞ்சலியாவது செலுத்தி இருக்கலாம் அல்லது பத்திரிக்கையாளர்களையாவது சந்தித்திருக்கலாம்.

விஜய் கொள்கை எதிரியாக சொல்லும் பா.ஜ.கவே, அவரை காப்பாற்ற முயற்சிக்கிறது. விஜய்க்கு தனது தொண்டர்கள், ரசிகர்கள் மீது என்ன அக்கறை இருக்கிறது. இப்படி நடந்ததற்கு தி.மு.க. தான் காரணம், முதல்வர் தான் காரணம் எனக் கூறி பழிபோட பார்க்கிறார்கள். உங்களது, தொண்டர்கள் அளவு கடந்து ஒரு இடத்தில் கூடுகிறார்கள், ஒருத்தர் மேல் ஒருத்தர் ஏறி மிதித்து தானே இறந்தார்கள். யாராவது மயக்க மருந்து தெளித்தார்களா, கல் எறிந்தார்களா? இது குறித்த ஏதேனும் ஆதாரம் உள்ளதா?

இந்த விடயத்தில் ஆதாயம் தேடத்தான் விஜய் ஆவலாக இருக்கிறாரே தவிர, மக்களுக்கு ஆறுதல் சொல்ல அவர் ஆர்வமாக இல்லை. இவை எல்லாம் அவரது அணுகுமுறையில் வெளிப்படுகிறது." என்று தெரிவித்துள்ளார்.






# விக்கிரவாண்டி அருகே விபத்து; இளைஞர்கள் மூவர் உயிரிழப்பு

விழுப்புரம் மாவட்டத்தின் விக்கிரவாண்டி அருகே நிகழ்ந்த வீதி விபத்தில் கார் தீப்பிடித்து எரிந்ததில் 3 இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

சென்னை, திருவல்லிக்கேணி லாயர்ஸ் ரோட்டைச் சேர்ந்தவர் அஜீஸ் (வயது 25). அதே பகுதியைச் சேர்ந்தவர் சம்சுதீன் (வயது 23). இவர் அஜீஸின் உறவினர். இவர்களது நண்பர்கள் சென்னை கொளத்தூரைச் சேர்ந்தவர் ரிஷி (வயது 25), தீபக் (வயது 25) மற்றும் ஆவடியைச் சேர்ந்த மோகன் (வயது 25). 5 பேரும் தனியார் வங்கியில் ஒன்றாக பணியாற்றி வந்துள்ளனர். தொடர் விடுமுறை காரணமாக 5 பேரும் சென்னையில் இருந்து மூணாறுக்கு சுற்றுலா செல்ல நேற்று அதிகாலை காரில் புறப்பட்டுள்ளனர். காரை அஜீஸ் செலுத்தியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சென்றபோது, கட்டுப்பாட்டை இழந்து கார் வீதியோர தடுப்பு மீது பாய்ந்து முன்னால் சென்ற லொறியின் பின்பக்கத்தில் மோதி கவிழ்ந்துள்ளது.

இதில் அஜீஸின் உறவினர் சம்சுதீன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மேலும், விபத்தில் உயிர் தப்பிய அஜீஸ் காரில் இருந்து வெளியேறி நண்பர்களை மீட்க முயன்றுள்ளார். அப்போது பொது மக்கள் உதவியுடன் பின் இருக்கையில் அமர்ந்திருந்த தீபக் மீட்கப்பட்டுள்ளார். அதற்குள் விபத்தின்போது வாகனத்தில் பற்றிய தீ கார் முழுவதும் பரவியுள்ளது. இதனால் ரிஷி மற்றும் மோகன் ஆகியோர் தீயில்கருகிஉயிரிழந்தனர்.மேலும்,காரும் முற்றிலும் எரிந்து சேதமடைந்துள்ளது.

விபத்து குறித்து தகவலறிந்த விக்கிரவாண்டி பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று தீபக் மற்றும் அஜீஸ் ஆகியோரை சிகிச்சைக்காக முண்டியம்பாக்கத்தில் உள்ள விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இடிந்து வீழ்ந்த பாடசாலை கட்டடம் 60 சிறுவர்களின் நிலை கேள்விக்குறி

இந்தோனேஷியாவில், பாடசாலை கட்டடமொன்றின் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்கள், உயிருடன் இருப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லையென மீட்புப் பணியாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.



இந்தோனேசியாவின், கிழக்கு ஜாவா நகரின் பழமையான அல்–கோஷினி இஸ்லாமிய பாடசாலையின் 4 ஆவது தளத்தில் கட்டுமான பணிகள் இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில், கடந்த 29 ஆம் திகதி கட்டடம் திடீரென இடிந்து வீழ்ந்தபோது, கட்டத்தின் தரை தளத்தில் ஏராளமான மாணவர்கள் கூடி பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்குண்டுள்ளனர்.

அவர்களை, மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இதுவரையில், 60 இற்கும் மேற்பட்டோர் இடிபாடுகளுக்கு சிக்கியிருக்கலாம் என கருதப்படுகின்றது.

இந்த கோர விபத்தில், இதுவரை ஐந்து மாணவர்கள் உயிரிழந்துள்ளதுடன், நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர் என அந்த நாட்டு பொலிஸ் உறுதி செய்துள்ளது.






# பாகிஸ்தானில் அரசுக்கு எதிரான போராட்டம் தீவிரம் அடைந்தது

## துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் போராட்டக்காரர்கள் மீது பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் குறைந்தது 12 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

38 முக்கிய கோரிக்கைகளை பாகிஸ்தான் அரசாங்கம் நிறைவேற்றத் தவறியதால் போராட்டம் தொடங்கியதாக கூறப்படுகிறது.

இப்போது இராணுவ அத்துமீறல்களுக்கு எதிராக பாரிய அளவிலான போராட்டமாக அது விரிவடைந்துள்ளது.

இதனால்,மக்களின்இயல்புவாழ்க்கை முடங்கியுள்ளது.

நேற்று வியாழக்கிழமை தொடர்ந்து மூன்றாவது நாளாக கொந்தளிப்பு தொடர்ந்தது, தத்யாலில் போராட்டக்காரர்களுக்கும் பாகிஸ்தான் இராணுவத்திற்கும் இடையே வன்முறை மோதல்கள் நடந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிலைமையைக் கட்டுப்படுத்தும் முயற்சியில், அதிகாரிகள் ஆயிரக்கணக்கான மேலதிக வீரர்களை அப்பகுதிக்கு அனுப்பியுள்ளனர்.

முசாபராபாத்தில் ஐந்து போராட்டக்காரர்களும், தீர்கோட்டில் ஐந்து பேரும், தத்யாலில் இரண்டு பேரும் கொல்லப்பட்டனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புப் படையினரும் உயிரிழந்துள்ளனர்.

வன்முறையில் மூன்று பொலிஸ் அதிகாரிகள் இறந்தனர் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

முசாபராபாத்துடன், ராவலகோட், நீலம் பள்ளத்தாக்கு மற்றும் கோட்லி ஆகிய இடங்களிலும் வன்முறை சம்பவங்கள் மற்றும் மோதல்கள் பதிவாகியுள்ளன, இது நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்துகிறது.

ஊடக அறிக்கைகளின்படி, 200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். அவர்களில் பலர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால் ஆபத்தான நிலையில் உள்ளனர் என கூறப்படுகிறது.

பிராந்தியம் முழுவதும் சந்தைகள், கடைகள் மற்றும் போக்குவரத்து சேவைகள் மூடப்பட்டுள்ளன.









# இன்றைய ராசி பலன்கள் -03.10.2025




இன்றைய நாள் நீங்கள் விரும்பத் தக்கதாக இருக்கும். உங்கள் இலக்கு களை எளிதில் அடைவீர்கள். இன்று பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அது உங்களுக்கு சாதகமான பலன் களைத் தரும்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக் கும். அதிகப்படியான பண வரவு ஊக்கத்தொகை யாக கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப் படும்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகமான மன ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சுமூகமாகவும் வெற்றிக ரமாகவும் அமைய நீங்கள் திட்டமிட்டு செய லாற்ற வேண்டும். உங்கள் புத்திசாலித் தனத்தை பயன்படுத்த வேண்டும். ஸ்ரீலட் சுமி நரசிம்மரை வணங்குவதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று உங்களுக்கு வெளியிலிருந்து ஊக்கம் கிடைக் காது. உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் பணி களை குறித்த நேரத்திற்கும் முடிப்பீர்கள். எதிர்பாராத வகையில் வரும் பணிகளையும் முடிப்பீர்கள்.

உறவு என்று வரும் போது நீங்கள் அதனை லேசாக கையாள வேண்டும். அன்பும் புரிந்து கொள்ளுதலும் உறவை சிறப்பாக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரும். தேவையானவை மற்றும் தேவையற்றவை போன்றவற்றை சாதுர்யமாக அறிந்து கொள்ள வேண்டும்.




இன்றைய நாள் பயனுள்ளதாக இருக்காது. என்றாலும் வருத்தப்படுவதை குறைத்துக் கொண்டு, உங்களுக்கு விருப்பமான விஷயங்களுக்காக நேரத் தையும் திறமையையும் பயன்படுத் துங்கள். தியானப் பயிற்சி சிறந்தது. குழப்பங்களுக்கு இடம் கொடாமல் தெளிவாக எண்ண வேண்டும்.

உங்கள் நாளை திட்டமிட்டு பணியாற்றுங்கள். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் அன்றாட பணிகளுடன் வேறு பணிகளையும் ஆற்று வீர்கள்.

உங்கள் உணர்சிகளை முறையாக கட்டுப்படுத்த வேண்டும். இதனால் உறவுப் பிணைப்பு பாதிக்கப்படும்.

இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை காணப் படாது. பணம் சம்பாதிக்கும் திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள். கண்டிப்பாக நல்லது நடக்கும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி உங்களுக்கு சாதகமாக அமையும் நாள். மிகவும் அற்புதமான நாள். உங்கள் முடி வெடுக்கும் திறமையில் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் உறுதி காணப்படும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலை யில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்துக்களை உங்கள் துணையுடன் இனிமை யான முறையில் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும்.

இன்று மொத்தத்தில் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நல்ல தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




எந்த விஷயத்தையும் லேசாக எடுத் துக்கொள்ளவேண்டும். இன்று பொறுமை அவசியம். இன்று உங்கள் பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

பணியிடத்தில் பரபரப்பு காணப்படும். திட்டமிட்டு முன்னுரிமைப்படி பணியாற் றினால் எல்லாப் பணிகளையும் எளிதாக முடிக்கலாம்.

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பை பரிமாறிக் கொள்வது, அதுவும் கஷ்ட நேரங்களில் பரிமாறிக் கொள் வது உறவில் மிகவும் அவசியம். அவர் விரும்பும் வகை யில் நடந்து கொள்வது சிறந்தது.

சிறு கடன்கள் மூலம் உங்கள்அடிப்படை தேவை களை எளிதாக சமாளிக்கலாம். உங்களிடம் அதிக பணம் இல்லாவிட்டாலும் இருக்கும் பணத்தில் எப்படி வாழ வேண்டும் என்று அறிந்திருப்பீர்கள்.

உங்கள் உடல் நலத்தை சீர்படுத்தி இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு பணம் செலவு செய்ய நேரலாம்.




ஆன்மீக சொற்பொழிவுகள் கேட்டல் மற்றும் அடிக்கடி கோவிலுக்கு செல்வது மனதிற்கு ஆறுதல் தரும்.முக்கிய முடிவு கள் எடுப்பதை தவிர்க்கவும். தியானம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.

செயல்களை திட்டமிட வேண்டும் மற்றும் அதன்படி முடிக்க வேண்டும். அப்பொழுதான் அவை உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும், தேவையற்ற செயல்கள் செய்வதை தவிர்க்க முடியும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். உறவு சம்பந்தமான விருப்பு வெறுப்புகளைப் பற்றி உங்கள் துணையிடம் பேசி தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் நல்ல புரிந்துணர்வும் உற வுப் பிணைப்பில் வலுவும் ஏற்படும்.

பயணத்தின் போதும் பணத்தை கையில் கொண்டு செல்லும் போதும் கவனமாக இருக்க வேண்டும். பயணத் தின் போது குறைந்த அளவில் பணத்தை கையில் எடுத் துச் செல்லுங்கள்.




நீங்கள் அதிகப்படியாக செயலாற் றினால் வெற்றியைக் காண நேரலாம். உங்களின் நகை மற்றும் விலை மதிப் புள்ள பொருட்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் பாதகமான விளைவு களை தவிர்கலாம்.

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். நீங்கள் சாதாரணமாக செய்வதை விட இன்று கூடுதலாக செயல் பட வேண்டும். என்றாலும் திட்டமிட்டு செயலாற் றினால் நீங்கள் நன்மை காணலாம். பனியின் தரத் தில் கவனம் தேவை. வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற் கொள்ளுங்கள். உங்கள் அன்பும் அரவணைப்பும் உங்கள் இருவருக்குமான உறவை வளர்க்க உதவும். உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொண்டால் பதிலுக்கு அவரும் உங்களிடம் அன்பை வெளிபடுத்துவார்.




இன்று இனிமையான சாதகமான நாள். இன்று நல்ல பலன்களைக் காண்பீர் கள். இன்றையநாளைமுறையாகதிட்டமிட வும். முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள்எந்தப் பணி செய்தாலும் அதில் இன்று வெற்றி கானபீர்கள். உங் கள் பணியைக் கண்டு உங்கள் மேலதி காரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் பேசி அளவளாவுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு நடந்து கொள்வீர்கள். ஒருவரின் கருத்துக்கு மற்றவர் மதிப்பு அளிப்பீர்கள்.

பணம் அபரிமிதமாக காணப்படும். அதனை உங்களின் நலனுக்கு பயன்படுத்துவீர்கள். பணத்தை சிறந்த முறை யில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களி டம் காணப்படும் நேர்மறையான போக்கின் காரணமாக நீங்கள் ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -03.10.2025




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப் பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட் டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.

நேர்மறையான எண்ணம் மற்றும் திட்டமிடல் மூலம் இன்று பதட்டமின்றி இருக்கலாம். இதனால் ஆரோக்கி யம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிறப்பான பலன்கள் கிடைக் காது. என்றாலும் அமைதியாக செயல் களை கையாண்டால் சரியாக செயலாற் றலாம். செயல்களை பொறுமையுடன் கையாளுங்கள்.

இன்று முன் கூட்டியே திட்டமிடலும் அதன்படி நடந்து கொள்வதும் கடினமாக இருக்கும். பணிகளை சரியான விதத்தில் கையாண்டால் சுமை குறைவாகத் தெரியும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இது மறக்க முடியாத நாளாக இருக்கும். இருவருக்கும் இடையே நல்ல பிணைப்பு ஏற்பட இருவரும் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். நல்ல வார்த்தைகளை பரிமாறிக் கொள்வதன் மூலம் இன்றைய நாளை சிறந்ததாக ஆக்கலாம்.

நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை விட அதிகம் பணம் இன்று உங்களுக்கு தேவையாக இருக்கும். என்றாலும் சூழ்நிலையைப் புரிந்து கொண்டால் எது தேவை எது தேவையில்லை என்று அறிந்து நீங்கள் உணர்வீர்கள்.




இன்று இறை வழிபாட்டில் ஈடுபடுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள்.

பணியிடத்தில் திட்டமிட்டு வேலை செய்தால் பலன் கிடைக்கும். உங்க ளின் நேர்மறையான அணுகுமுறை காரணமாக அதிகப் பணிகளையும் எளிதாக கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது புரிந்துகொண்டு பொறுமையாக பேச வேண்டும். உங்கள் வார்த்தைகள் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்புளதால் கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் அன்பாகப் பழகு வதன் மூலம் நேர்மறையான விளைவுகள் காணலாம்.

நீங்கள் அதிகமாக செலவு செய்வீர்கள். ஆனால் சிறப்பாக திட்டமிட்டால் பணம் குறைவாக செலவு செய்யலாம். தேவையற்ற செலவுகளை தவிர்க்கவும்.

உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது. உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.




நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படுவீர் கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்க லாம். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். வெற்றியின் உச்சத்திற்கு செல்வீர்கள்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் முயற்சி பாராட்டைப் பெறும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி சிறியதாக இருந்தாலும் அதனை மகிழ்வுடன் சிறந்த முறையில் செய்வீர்கள்.

இன்று உங்களுக்கும் உங்கள் துணைக்கும் மிகவும் இனிமையான மகிழ்ச்சியான நாள். இருவரும் ஒரு வரோடொருவர் நேரம் ஒதுக்கி கலந்து பேசலாம். அதே சமயத்தில் அமைதியைக் கையாள வேண்டும்.

இன்று கணிசமான பணம் சேமிப்பீர்கள். பங்கு வர்த் தகத்தின் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக காணப் படுவீர்கள்.



# வெள்ளவத்தையில் ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து ஆண் ஒருவர் மரணம்!

ஓடும் ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்பு, வெள் ளவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முஹ"து மாவத்தையிலுள்ள இராம கிருஷ்ணா மிஷனுக்கு அருகில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற் றுள்ளது.

பெலியத்தவில் இருந்து அனுராதபுரம் நோக்கிச் சென்ற ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து மேற்படி நபர் உயிரிழந்துள் ளார்.

இந்தச் சம்பவத்தில், பிலியந்தலை யைச் சேர்ந்த 66 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று விசாரணை களில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகிற னர்.